Registered No. M-4345.

யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம௵ டிசம்பர்௴ 19உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 40

ஓட்டப் பந்தயமா?

என்ன இருந்தாலும் ஜெர்மனிக்காரன் ஜெர்மனிக்காரன்தான்! அவனுக்கு ஈடு அவன்தான். 'அது எப்படித் தெரியும்?' என்று கேட்பீர்களே! ஜெர்மனிக்காரங்க இப்பொழுது ருஷ்யாவிலே ஓடுகிற ஓட்டத்தைப் பார்த்துத்தான் சொல்கிறோம். அடேயப்பா! என்ன ஓட்டம்! என்ன ஓட்டம்! அதிலே அவர்களை யாராலும் ஜெயிக்கவே முடியாதுபோலிருக்கு. உலகத்திலே இருக்கிறவர்களுக்குள்ளே ஓட்டப் பந்தயம் வைத்தால், ஜெர்மனிதான் 'பஸ்டு பிரைஸ்' வாங்கும்போலிருக்கு! அந்த விதமாகத் தலைகால் தெரியாது, இருக்கிற ஆயுதங்கள், அடிபட்ட ஆட்கள், பிடிச்ச இடம், சொத்து, சந்தோஷம் எல்லாத்தையும் விட்டுவிட்டு ஒரேயடியாக மேற்குப் பக்கத்தைப்பார்த்து ஓடுகிறார்கள் ஜெர்மானியர்கள்.

அந்த மேற்குத் திசையிலேதான் அப்படி என்ன மோகம் இருக்கிறது என்று கேட்கிறீர்களா? மேற்குத்திசையில் ஒண்ணுமில்லை. ஆனால் அவர்களுக்குப் பின்னால்தான் ருஷ்யர்கள் மகா உத்சாகத்தோடு அவர்களை நொறுக்கு, நொறுக்கு என்று நொறுக்கிக்கொண்டு துரத்திக்கொண்டு வருகிறார்கள். எப்பொழுதுமே பின்னாலே துறத்துகிறவனைவிட முன்னாலே ஓடுகிறவன்தானே வேகமாக ஓடணும்? இல்லாமப்போனா அவன் கையிலே அகப்பட்டுக்கொண்டு சம்பிரமமாக பூசைக் காப்பு வாங்கவேண்டி வந்துவிடுமே! அதனாலேதான், பின்னாலே துரத்திக்கொண்டுவருகிற ருஷ்யப் படைகளைவிட, ரொம்ப வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள் ஜெர்மன் தேசத்துப்படைகள்.

பாவம்! ஹிட்லர் கண்ட கனவெல்லாம் பாழாகப்போச்சு. பெரிய பெரிய மனக்கோட்டையெல்லாம் கட்டிக்கொண்டிருந்தார் அந்த மனுஷர். ருஷியா ரொம்பப் பெரிய தேசம். அது முரட்டுக் கரடி. அதோடே சிநேகம் செய்துகொண்ட பாவனையாக, எத்தனை நாள்தான் அதோடே குலவாடிக்கொண்டு இருக்கிறது. அதை சும்மாவிட்டு வச்சிருந்தால், என்றாவது ஒரு நாள் அது பிரிட்டனோடு சேர்ந்து, நம்மை உரிச்சி எடுத்துடும். அதுக்கு முன்னாலேயே அந்த ருஷ்யக் கரடியைச் சாக அடிச்சிடணும். அப்படி என்று திடுதிப்பென்று ருஷ்யா மேலே ஜெர்மனியைப் பாயச் செய்தார்.

ஆனால், ருஷ்யா சாதாரணமான தேசமா என்ன? சாதாரணமான தேசமில்லைதான். ஆனால், அது எங்கே தெரிஞ்சது ஹிட்லருக்கு. ஏதோ குடியானவங்களா நிறைஞ்சி கிடக்கிற தேசம்; இங்கே கலப்பையைத் தூக்கிக்கொண்டு உழுது, பயிரிட்டு, சாப்பிட்டுவிட்டு கிருஷ்ண ராமா கோவிந்தான்னு படுத்துத் தூங்கிக்கொண்டு இருக்கிறவங்கதான் ஜாஸ்தி; அவர்களுக்கு துப்பாக்கி, பீரங்கிகளைத் தூக்கிச்சுட எங்கே தெரியப்போகிறது? அதோடே, நாலு போடாக ஓங்கிப் போட்டா, 'ஐயோ, அப்பா' இன்னு அலறி அடித்துக்கொண்டு, நாலாபக்கமும் ஓட ஆரம்பிச்சிடமாட்டாங்களா? அப்புறம் ருஷ்யா பூராவும் நம் கையிலே வந்தாப்போலேதான். அப்படி வந்துவிட்டால், இங்கிலாந்திற்கு அருகேயிலிருந்து, ஜப்பான் வரை நம்ம ராஜ்யம்தான். அத்தனைக்கும் நாமே அதிபதி. டேயப்பா? அதுக்குமேலே ஒரு மனுஷனுக்கு என்ன வேண்டும்? அப்புறம் ஒரு பயல் நமக்கு நிகரில்லை. இப்படியெல்லாம் நினைத்துக்கொண்டிருந்திருப்பார் அந்த மனுஷர்.

ஆனால் என்ன ஆச்சு? ருஷ்யா மேலே பாய்ந்தாரா? கிடுகிடு என்று அவருடைய பிசாசுப் படைகள் ரொம்ப ஜோராகத்தான் ருஷ்யாவிற்குள்ளே போய்க்கொண்டிருந்தன. ஜெயத்திற்குமேலே ஜெயம் கிடைத்துவந்தது. லெனின்கிராட் என்றொரு முக்யமான ருஷ்ய நகரம். ருஷ்யாவிலே வடமேற்கு மூலையிலே இருக்கிறது. அந்த ஊரை ஜெர்மனிக்காரர்கள் வளைத்துக்கொண்டார்கள். ஆனால் அதை இன்னும் பிடிக்கவேமுடியலை. அப்புறம், ருஷ்யாவுக்குத் தலைநகரமாக உள்ள மாஸ்கோமேலே கண் போட்டார்கள்.

மாஸ்கோ நகர்மேலே குண்டும் வீசினார்கள். உடனே அங்கிருந்த சர்க்கார், கிழக்கே பலநூறு மைல்களுக்கு அப்பாலே போய்விட்டது. ஜெர்மானியர் மாஸ்கோவிற்கு ரொம்ப ரொம்ப பக்கத்திலே வந்துவிட்டார்கள்; மாஸ்கோ இனிமேலே காலிதான். ஏதேது? பெரிய ஆபத்து வந்துவிட்டதே!' என்று உலகமே பயந்து கொண்டிருந்தது வடக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு இத்தனை திசைகளிலேயிருந்தும் நாஜிப்படைகள் வெற்றி யென்னும் கள்ளைக் குடித்த மயக்கத்திலே, இன்னும் சில நாட்களிலே என்ன நடக்கப்போகிறதென்பதே தெரியாமல், ஏராளமான நஷ்டங்களையும், லக்ஷ்யம் பண்ணாது முன்னேறிக்கொண்டிருந்தன.

இங்கே இப்படியிருக்க, தெற்கே காகஸஸ் என்ற பிரதேசத்திற்கு ஆபத்து நெருங்கிக்கொண்டிருந்தது. இந்த காகஸஸ் என்ற பிரதேசத்திலேதான் எண்ணெய்க் கிணறுகள் கணக்கில்லாமல் இருக்கு. இப்பொழுது நடக்கிறதெல்லாம் விமான டாங்கி யுத்தம் தானே? அதெல்லாம் சும்மா ஓடுமா என்ன? இல்லாவிட்டால் தண்ணீரை ஊற்றி ஓட விடமுடியுமா? ஹூஹூம், அசல் பெட்ரோல் வேணுமே ஐயா, அதனாலே ஹிட்லர் ஒரு பெரிய படையை அந்தத் திசையிலே அனுப்பினார்.

அந்தப் படையும் ராஸ்டாவ் என்கிற பட்டணம் வரை வந்துவிட்டது. ராஸ்டாவும் கொஞ்சநேரம் ஜெர்மனிக்காரங்ககையிலே இருந்தது. பிடித்தானய்யா சனீஸ்வரன். வடக்கே யிருந்த ஒரு ருஷ்ய சேனாதிபதி தெற்கே வந்துசேர்ந்தார். ஜெர்மானியர்களுக்கு அவரே சனியன்போலானார். அடித்தார் ஒரு அடி, 'அப்பப்பா!' என்று அலறிக்கொண்டு அங்கிருந்த ஜெர்மன்படை பின்வாங்கிற்று; அவ்வளவுதான்! விளையாட்டு மோட்டாருக்கு 'கீ' கொடுத்துவிட்டாப்பலே ஆச்சு. அப்பொழுது பிடித்த ஓட்டம்தான், இன்னும் நிற்கவில்லை.

'அடிராஷ்க்கை! யாராலும் ஜெயிக்கவே முடியாது என்றிருந்த ஜெர்மன் படையா ஓடுகிறது? பலே! நம்ம ருஷ்யாக்காரங்களுக்கும் இவ்வளவு தைரியமும் பலமும் இருக்கிறதா? நம்ப சக்தி இவ்வளவு நாளாக நமக்கே தெரியாமல் போச்சே! கிளம்புங்கடா! கட்டுங்கடா கச்சையை! வையுங்கடா பூசை' என்று மாஸ்கோ பக்கத்திலே உள்ள ருஷ்யர்களும் உத்சாகத்தோடு கிளம்பினார்கள்.

நரிக்குக் கொண்டாட்டம் என்றால், நண்டுக்குத் திண்டாட்டம் தானே! ருஷ்யர்கள் இப்படி எதிர்பாராது நாலு இடங்களில் ஜெர்மானியர்களை ஜெயிக்கவே, ஜெர்மன் படையிலே திகில் உண்டாகிவிட்டது. அதோடு, ருஷ்யப் பனியும் பிரமாதமாகப் பெய்ய ஆரம்பித்துவிட்டது. பனியென்றால் நம்ப மார்கழி மாசத்திலே இங்கே பெய்கிறதே அதுமாதிரி இல்லை. இது என்ன சும்மா மூடுபனி! இதுக்கே நம்ப பெரிய போர்வையாக எடுத்து பாடடியம்மா மாதிரி நன்றாகப் போர்த்திக் கொண்டுதான் வெளியிலே புறப்படுகிறோம். ஆனால் ருஷ்யாவிலே பனிகாலம் என்றால், கட்டி கட்டியாக, எங்கே பார்த்தாலும் வெள்ளை வெளேர் என்று வெள்ளைத் துணி விரிச்சாப்போலே, இரண்டடி மூன்றடி உயரத்திற்கு பூமியிலே படிந்து போகும். ருஷ்யாவிலேயே பிறந்து, வளர்ந்தவங்க கூட பெரிய பெரிய கரடித்தோல் கம்பளங்களால் முகம் தவிர பாக்கி இடங்களை மூடிக்கொண்டுதான் இருப்பார்கள். வெளியிலே வந்தால், அந்தப் போர்வை மேல் எல்லாம் இரண்டு விரல் கனத்திற்கு பனி உறைந்துபோகும். அப்படிப்பட்ட இடத்திலே.

உடம்புமேலே ஒன்றுமில்லாமல் துப்பாக்கி, பீரங்கிகளை எடுத்துக்கொண்டுபோய், சண்டைபோட முடியுமா?

இது சாத்யமில்லை. இதே பனிதான் முன்னே ஒரு காலத்தில் ருஷ்யாமீது படையெடுத்துவந்த நெப்போலியனை உருப்படாமல் அடித்தது. அந்தத் தைரியம்தான் ருஷ்யர்களுக்கு. அதனாலேதான், அவர்கள் ஆவலோடு பனிகாலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் ஹிட்லருடைய சேனாதிபதிகளோ, பனிகாலம் வருமுன் லெனின் கிராட், மாஸ்கோ ஆகிய இடங்களைப் பிடித்துவிடலாம் என்று தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஆரம்பத்திலே பத்து வாரம்தானே ஐயா 'டயம்' கேட்டாங்க, இப்போ மாசக் கணக்கிலே ஆகி, அரை வருடமும் முடிந்து போச்சே!

பனி பெய்ய ஆரம்பித்தது. ஜெர்மானியரிடம் பனிக்குத் தப்பவேண்டிய சௌகரியங்கள் இல்லை. கை விரல்கள் மரத்துப்போச்சு என்றால், துப்பாக்கியைச் சுடுவது எப்படி? வெறும் நாட்டுப்புறத் திருடனை, வெறும் துப்பாக்கியைக் காட்டினதும் பயந்து ஓட. அது இல்லாமல், ருஷ்யர்களிடம் பலமிக்க குதிரைப் படை வேறே இருக்கிறது. மேலே இருக்கிறவன் 'ஹய்' 'ஹய்' என்று ஓட்டும்போது, குதிரை நிற்குமா என்ன சும்மா? சும்மா நாலுகால் பாய்ச்சலில் வரும் குதிரைப்படைகளைக் கண்டால், வயிற்றிலே புளியைக் கரைத்தாப்போலே ஆகிவிடுகிறதாம் ஜெர்மானியருக்கு.

பேசாமல் தலை பிழைச்சது தம்பிரான் புண்ணியமென்று ஓட ஆரம்பித்துவிட்டார்கள். மாஸ்கோ பக்கத்திலேமட்டும் அறுபத்தையாயிரம் பேர்கள் இறந்து போயிருக்கிறார்கள். அப்படியென்றால் முக்கால் கும்பகோணம் காலியானதுமாதிரி என்று வைத்துக் கொள்ளுங்களேன். ஐயோ! என்ன அநியாயம்.

ருஷ்யப்படைகள் ஜெர்மானியரை லேசில் விடுவதாக இல்லை. பின்னாலிருந்து அசல் படை அடித்து நொறுக்குகிறது. பின்னால் குரங்குப்படை தன் வாலை ஆட்டி, சங்கடம் விளைவிக்கிறது. பாவம்! ஜெர்மானியர் தவித்துக்கொண்டே, சிரமப்பட்டுப் பிடித்த நூற்றுக்கணக்கான கிராமங்களை அப்படி அப்படியே விட்டு ஓடுகிறார்கள். உடனே ஹிட்லருக்குக் கோபம் வந்தது. மாஸ்கோ முனைக்குப் போன சேனாபதிக்குச் சீட்டுக் கிழித்து வீட்டுக்கு அனுப்பிவிட்டார். ருஷ்யாவில் ஜெர்மானியருக்கு ஏற்பட்டுவரும் தோல்விகள் பிரதமாதமானவை. ஜெர்மனிக்கே இது பெரிய அவமானம்!

இந்த அவமானத்தைத் தாளமுடியாது, ஹிட்லர் இன்னும் ஏதாவது பயங்கரமான காரியத்தைச் செய்யத் தொடங்கலாம். ருஷ்யாவில் மட்டுமில்லாது, வட ஆப்பிரிகாவிலும் ஜெர்மானியருக்குப் படுதோல்வி ஏற்பட்டுவருகிறது. அங்கு இந்தியப் படைகளே முன் வரிசையில் நின்று ஜமாய்த்து வருகிறார்கள். எவ்வளவுவோ நஷ்டம்தான். ஆனாலும் முன்வைத்த காலைப் பின்வைப்பது வீரர்க்கு அழகல்ல என்பது அவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியுமே!

அவர்களோடு நியூஸீலந்து, தென் ஆபிரிகா, பிரிட்டிஷ்படைகளும் நின்று போராடுகின்றன. வட ஆபிரிகாவில் உள்ள லிபியாவில் பெரிய பாலைவனம் இருக்கிறது. அங்குதான் இந்தச்சண்டைகள் எல்லாம் நடக்கிறது. பாலைவனச்சண்டை என்பதாலேயே, அங்கு முக்யமான நகர்கள் அதிகம் இராதென்பது தெரிந்திருக்கலாமே உங்களுக்கு! அங்கு சண்டை போடுவதெல்லாம் ஊர்பிடிக்க அல்ல. வட ஆபிரிகாவில் உள்ள ஜெர்மானியரின் பலத்தைச் சிதற அடிக்கத்தான். அந்த வேலையில் பிரிட்டிஷார் இது வரை வெற்றியே பெற்றுவந்திருக்கிறார்கள். இந்த வேலையில் ஒரு புது, வாலிப ஆபீசர் ஈடுபட்டு, வெகு சாமார்த்தியமாக வேலை செய்தார். இந்தியாவில் சேனாபதியாக இருந்தவர்தான் இப்பொழுது அங்கு சேனாபதி. இவர்கள் போட்ட பிளான்கள் வெகு அழகானவை. அவர்களுடைய திட்டப்படியே எல்லாம் நடந்துவருகிறது. லிபியாவிலே ஜெர்மானியர் தவிர, இத்தாலியரும் இருக்கிறார்கள். ஜெர்மானியரைப் பிடிப்பதே கஷ்டமாக இருக்கிறதாம். தவிர இத்தாலியர்களை பிரிட்டிஷார் வெறும் துரும்புக்குச்சமானமாகவே வைத்திருக்கிறார்கள். ஆமாம்னா! சிங்கம் அடித்துப் போட்ட மானை, மெள்ள வந்து நாக்கால் நக்கும் நரி போன்ற குணம்தானே இந்த இத்தாலிக்கு. அது தனியாக இருந்திருந்தால், இவ்வளவு நேரத்திற்கு அது கோவிந்தா, ஆகி, அதுபோன இடம் புல் முளைத்துப் போயிருக்குமே! முரடனோடு சேர்ந்திருப்பதால் கொஞ்சம் முழித்துப்பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த முரடன் தயவு இல்லை; அபிஸீனியா அதன் கையிலிருந்து, ஆதி சொந்தக்காரர் கைக்குவந்தது.

ஆகவே தற்சமயம், நேசதேச நாடுகளுக்கெல்லாம் விரோதி ஹிட்லர்தான். அவரால் தானே ஜப்பான் போரில் இறங்க நேர்ந்தது. அதன் பலனை அது அனுபவிக்கப்போகிறது. அது வேறே விஷயம். பக்கத்துவீட்டிலே இருக்கிறவள் பணக்காரப் பொம்மனாட்டி, நம்ம வீட்டிலேயோ அவ்வளவு பணமில்லை. அப்படியிருக்கிறபோது, பக்கத்து வீட்டுக்காரிக்குப் போட்டியாகப் புடவையும், நகையும் வாங்கி அணிகிறது என்றால் சாத்யமா என்ன? பக்கத்து வீட்டுக்காரி வைர அட்டிகையும், கலப்பில்லாத ஜரிகையாலேயே ஆகிய புடவையும் வாங்கினால், நாமும் வாங்க முடியுமா? ஏதோ ஒரு பெங்களூர் புடவை, ஒரு தங்க மோதிரம், ஒரு கடியார சங்லின்னா வாங்கலாம். அதுக்கே மேலேபோனால் 'ஐ.பி.' கோர்ட்டுக்குப் போகவேண்டியதுதானே?

அதேமாதிரி ஜப்பானும், ஜெர்மனியோடு போட்டி போட்டுக்கொண்டு எத்தனை காரியங்கள் தான் செய்யமுடியும்? அதன் சக்தி என்ன? ஜெர்மனியின் சக்தி என்ன? கேவலம் நீங்கள் உயிர் வாழவும், எங்களைக்காத்துக்கொள்ளவுமே போராடுகிறோம், என்று ஜெர்மானியர் சொன்னார்கள். ஜப்பானும் அதே பல்லவியைப் பாடுகிறது. இம்மாதிரியே போனால், புலியைப்பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்ட கதையாக அல்லவா முடியும்.

ஜப்பான் இப்பொழுது கொஞ்சம் ஜோரில்தானிருக்கிறது. ஆனாலும் அதற்கு உள்ளூரப் பயம்தான். அது யார் சொன்னா என்கிறீர்களா? ஜப்பானே சொல்கிறதே! ; ஐயா ஜப்பானிய சகோதர சகோதரிகளே! ஏதோ முதல் நாள் சண்டையிலே பிரமாத வெற்றி கிடைத்தது. அதை மனசில் வைத்துக் கொண்டு ரொம்பப் பெரிய கோட்டை கட்டிவிடவேண்டாம். இது பயங்கரமான சண்டையாகும். ரொம்ப நாள் நடக்கும். இதிலே வருகிற ஆபத்துக்களையும், அவஸ்தைகளையும் சகித்துக்கொள்ள மனசைத் தைரியப்படுத்திக்கொள்ளுங்கள். நம் நாட்டருகே இருப்பது அமெரிக்க நீர்மூழ்கிகள் வட்டம் போட்டுக் கொண்டிருக்கிறதாம். உஷார் என்று கூறுகிறது.'

இது இப்படியிருக்க, ஜப்பானியர் வட மலேயாவிற்குள்ளும், பர்மாவின் தென்கோடியிலும் புகுந்துவிட்டார்களாம், அவர்களை இந்திய, பிரிட்டிஷ் படைகள் சமாளித்து வருகிறார்களாம். ஜப்பானியர் முதலைகள் நிறைந்த ஆறுகளையெல்லாம் அலக்ஷியமாகக்கடந்து வருகிறார்களாம். இதற்கென்றே பழக்கப்பெற்றிருக்கிறார்கள் போலிருக்கிறது. அவர்கள் குண்டு மழைக்கு அஞ்சுவதில்லையாம். ஆனால் இந்திய வீரர்களின் கைகளில் உள்ள விஷக் கத்திகளையும், பிரிட்டிஷாரின் சனியன்களையும் கண்டால் கதிகலங்கிப்போகிறார்களாம்.

சிங்கப்பூருக்கு ஆபத்து வரப்பார்க்கிறது. ஆனால் அங்கு பிரிட்டிஷார் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியப்படை அங்கு வந்துவிட்டது. சிங்கப்பூரில் உள்ள ஆடவர், பெண்டிர் எல்லாம் கட்டாய சேவை செய்யவேண்டுமென உத்திரவு பிறந்துவிட்டது. எல்லோரும் வெகு உஷாராகவே அந்நாட்டைப் பாதுகாத்து வருகிறார்கள். அமெரிக்கருக்கும், டச்சுக்காரருக்கும் சொந்தமான தீவுகள் பலவற்றிற்கு ஆபத்து உண்டாகியிருக்கிறது. அமெரிக்கத் தலைவர் சர்வாதிகாரம் பெற்றுவிட்டார். அமெரிக்கப் படைகள் வெளிநாடுகள் செல்ல அனுமதிபெற்றுவிட்டன. கானடாவில் மூன்று தொழிற்சாலைகளில் தயாராகும் வெடிகுண்டுகளை அமெரிக்காவிற்கு சப்ளை செய்ய பிரிட்டன் உத்திரவிட்டுவிட்டது. அமெரிக்காவிலிருந்தும் ஏகமான உதவிகள் எல்லா நாடுகளுக்கும் கிடைத்துவருகின்றன. உலகத்திலே உள்ள ஜனத்தொகையில் ஐந்தில் நாலு பாகம் பிரிட்டிஷார் பக்கமிருக்கிறது. ஒரு பங்குதான் ஹிட்லர் கோஷ்டி. அது ஆட்டுகிறவாலை அறுத்து முடித்துவிடுவதென்று எல்லோரும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் 70 லக்ஷம் பேர்களை பட்டாளத்தில் சேர்க்கமுடியுமாம். பத்துநாட்களுக்கு முன்வரை காதலர்களின் உல்லாச இடமாக இருந்த ஹொனலூலு இப்பொழுது பெரிய யுத்தகளமாக மாறிவிட்டது. சினிமா க்ஷேத்ரமான ஹாலிவுட்டிற்கும் ஆபத்துவந்திருக்கிறது.

இந்த நிலைமையில் மலேயாவில் உள்ள பிரிட்டிஷ் படைகளைக் கடைசிவரை போராடும்படியும், சைனா

வில் உள்ள ஹாங்காங் நகரில் வசிக்கும் பிரிட்டிஷாரைப் பணியவேண்டாமென்றும் ஆக்ஞை பிறந்திருக்கிறது. அங்கெல்லாம் கோர யுத்தம் நடக்கிறது.

நேச தேசத்தார் இதற்கெல்லாம் சளைத்தவர்களா? ஜெர்மனியை தலைதூக்கவொட்டாது அடித்தாலே எல்லாம் சரியாகிவிடும் என்ற உண்மையை நன்றாக அறிந்துகொண்டிருக்கிறார்கள் அவர்கள். ஜெர்மனியின் அட்டகாசங்களுக்கு அவர்கள் அஞ்சவில்லை.

எங்குபோவதென்று தெரியாது ஹிட்லர் தவிக்கிறார். தனது ஆத்திரத்தை மீண்டும் அவர் பிரிட்டிஷ் மக்கள்மீது காட்டலாம். துருக்கிமீது பாயலாம். ஆனால் பிரிட்டிஷ் மக்களின் உடம்பில் உள்ள பீதியெல்லாம் முன்பே போய்விட்டது. இங்கிலாந்திலே 108 வயதானதோர் கிழவி சமீபத்தில்தான் மாண்டாளாம். ஒரு நாள் ஜெர்மன் குண்டொன்று அவள் வீட்டருகே விழுந்ததாம். அப்பொழுது அவள் சொன்னாளாம் "ஐயே! பு! எங்கம்மாவை ஆனானப்பட்ட நெப்போலியனே பயமுறுத்தமுடியவில்லை. அப்படிப்பட்ட அம்மா வயித்திலே பிறந்த நானா இந்தச் சிறு பயல் ஹிட்லர் கிட்டே பயப்படப்போறேன்" என்று தைரியமாக இருந்தாளாம் அவள். இப்படிப்பட்ட மனோ தைரியம் யாருக்கு வரும்?

ஒரு விஷயம்மட்டும் நம் நினைவிலிருக்கவேண்டும். முன்பெல்லாம் எங்கோ சண்டை நடந்துகொண்டிருந்தது. பேப்பர்களைப் பார்த்துவிட்டு, 'ஐயோ! பயங்கரமாயிருக்கே! த்சு! த்சு! த்சு! எவ்வளவுபேர் போயிருக்கா! அங்கே பிணக்காடாக இல்ல போயிருக்கும்! இது என்ன அநியாயமாய்யிருக்கே!' என்று சொல்லிக்கொண்டே ஒரு வாய் காப்பியோ, ஒரு வாய் உப்புமாவோ, ஒரு துண்டு ஹல்வாவோ உள்ளே தள்ளிக்கொண்டிருந்தோம். ஆனால் இன்று இந்தியாவுக்குப் பக்கத்திலேயே வந்துவிட்டது யுத்தம். இனியும் நாம் தூங்கமுடியாது. எப்பொழுதும் உஷாராகவே, அந்த விஸ்வாமித்திரனது யாகத்தை காக்கவந்த ராமலக்ஷ்மணர்கள்போல் நமது நாட்டையும் காக்கவேண்டிய அவசியம் நேரிட்டிருக்கிறது. கவனித்துக்கொள்ளுங்கள். இவ்வளவு சொன்னால் போராதா?

ஜப்பானிய யுத்தம்

பிலிப்பைன் தீவுகளின் பாதுகாப்பு

சிங்கப்பூரின் முக்கியம்

பிரிட்டனின் கடற்படைத் தளம்

ஜப்பான் இரண்டு வாரங்களாக யுத்தம் நடத்திக்கொண்டு வருகிறது. அதனுடைய நோக்கம் சிங்கப்பூரையும், பிலிப்பைன் தீவுகளையும் கைப்பற்ற வேண்டும் என்பதுதான். சிங்கப்பூர், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு முக்கியமான கடற்படைத்தளம். அது மலாய் நாட்டுக்குத் தென்கோடியிலுள்ள பிரம்மாண்டமான ஒரு கடல் பாதுகாப்பு அரண். மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் எப்படி ஜிப்ரால்டர், ஏடன் முதலிய பட்டணங்கள் பாதுகாப்பு வாசல்படிகளைப்போல் இருக்கின்றனவோ, அப்படியே தூரக் கிழக்குப் பிரதேசத்தில் சிங்கப்பூர் இருக்கிறது. சிங்கப்பூர் பலமாகப் பாதுகாக்கப்பட்டு ஜப்பானுடைய எதிர்ப்பைத் தடுக்கக்கூடியதாய் இருக்கிறது.

பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்ற வேண்டுமென்பது ஜப்பானுடைய மற்றொரு நோக்கம். இது அமெரிக்காவின் வெளிப்பாதுகாப்பு அரண். ஹாவே தீவிலிருக்கும் பெர்ல் துறைமுகத்தை, முதல் முதலில், ஜப்பான் தாக்கியதற்குக் காரணம் அங்குள்ள அமெரிக்கக் கடற்படை பலத்தை ஒடுக்கி விடவேண்டும் என்பதுதான். அப்படி ஒடுக்கிவிட்டால், அமெரிக்காவின் சண்டைக் கப்பல்கள் மேற்கே விரைவாக பிலிப்பைன் தீவுகளின் உதவிக்காகச் செல்லமுடியாது. அப்போது ஜப்பான் சௌகரியமாக டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் மேலாவது, அல்லது ஆஸ்திரேலியாவின் மேலாவது படையெடுக்கலாம். இதுதான் ஜப்பானுடைய எண்ணம். பிலிப்பைன் தீவுகளைப் பற்றிய சில விவரங்களை இப்போது கவனிப்போம்.

பிலிப்பைன் பிரதேசம்.

பிலிப்பைன் தீவுகள், இண்டோ-சீனாவுக்குக் கிழக்கிலும், ஜப்பானின் ஆதிக்கத்திலிருக்கும் பல சிறு தீவுகள் கூட்டத்துக்கு மேற்கிலும், ஜப்பானியத் தீவாகிய பார்மோசாவுக்குத் தெற்கிலும், டச்சுக் கிழக்கிந்திய தீவுகளுக்கு வடக்கிலும், இருக்கின்றன. பிலிப்பைன் தீவுகளின் வடக்குக் கோடியில் உள்ள சிறு தீவுகளுக்கும், பார்மோசாவுக்கும் மத்தியில் பாஷீ கால்வாய் இருக்கிறது. தெற்கில் வடக்கு போர்னியோ மிக அருகாமையில் இருக்கிறது இந்தப் பிரதேசத்தில் உள்ள முக்கியமான இடங்களுக்கு இடையில் உள்ள தூரத்தைப்பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன:—

பிலிப்பைன் தீவுகளில் வடக்கில் உள்ள பெருந்தீவாகிய லூசான், சீன தேசத்திலிருந்து 500 மைல் தூரத்தில் உள்ளது.

பிலிப்பைன் தீவுகளின் தலை நகரமும், லூசானின் மிக முக்கியமான பட்டணமுமாகிய மணிலாவுக்கும், சீனாவிலுள்ள ஹாங்காங் என்ற முக்கிய பட்டணத்துக்கும் 640 மைல்.

மணிலாவிலிருந்து சிங்கப்பூருக்கு 1,340 மைல். மணிலாவிலிருந்து, அமெரிக்காவின் பசிபிக் கடற்படைத் தளமாகிய பெர்ல் துறைமுகத்துக்கு 5,000 மைல் தூரம்.

மொத்த விஸ்தீர்ணம்.

பிலிப்பைன் தீவுகளின் மொத்த விஸ்தீரணம் 115,000 சதுர மைல்; ஏறக்குறைய பிரிட்டிஷ் தீவுகளைப் போன்றது. ஜனத்தொகை 160 லட்சம். வடக்கிலிருக்கும் லூசான் தீவு 40,814 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. தெற்கில் உள்ள மிண்டானோ தீவு 36,906 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. இவையிரண்டுக்கும் மத்தியில் 8 தீவுகள் இருக்கின்றன. அநேக சிறு தீவுகள் இருக்கின்றன. மொத்தத்தில் 7,000 தீவுகள் இருக்கின்றன என்று சொல்லலாம்.

பிலிப்பைன் தீவுகள் மிகவும் செழிப்பானவை. நெல் இங்கு ஏராளமாக விளைகிறது. ஆனால் உலகத்தில் வேறு பொருள்களுக்காக அது பேர்போனது. அவையாவன:—தங்கம், 'குரோமைட்' என்ற உலோகம், சர்க்கரை, தேங்காயிலிருந்து செய்யும் பொருள்கள், மணிலா சணல் (உலகப் பிரசித்தி பெற்ற சணல் கயிறுகள் இதிலிருந்து தான் செய்யப்படுகின்றன), புகையிலை.

பிலிப்பைன் தீவுகளில் அநேக வகுப்பினர் வாழ்ந்து வருகிறார்கள். பிலிப்பினோஸ், மலாய், நீக்ரோ, சீனர்கள், ஜப்பானியர்கள் முதலிய பல வகுப்பினரும், நாட்டினரும், இங்கு இருக்கிறார்கள். இதில் ஜப்பானியர்கள் தான் தந்திரமாக அந்த நாட்டுப் பெண்களைக் கலியாணம் செய்துகொண்டு, வியாபாரம், மீன் பிடித்தல் முதலிய பலவித வேலைகளைச் செய்து வந்தார்கள். நாட்டு மக்கள் தாங்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள்களை எல்லாம் ஜப்பானிய பாங்கிகளிலும், ஸ்தாபனங்களிலும் போட்டு வைத்தார்கள். பிலிப்பைன் தீவுகளில் ஜப்பானிய ஐந்தாம் படை வேலை செய்ய ஆரம்பித்தது.

அரசியல் முன்னேற்றம்.

1934-ம் வருஷம் பிலிப்பைன் தீவுகளுக்கு அமெரிக்கா பூர்ண அரசியல் சுதந்தரம் கொடுத்துவிட்டது. 1898-ம் வருஷத்திலிருந்து அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருந்து வந்த பிலிப்பைன் தீவுகளில், நாளடைவில் அரசியல் உணர்ச்சி அதிகப்பட்டது. 1907-ம் வருஷம் பிலிப்பைன் மக்கள் அரசாங்க வேலைகளில் அமர்த்தப்பட்டார்கள். 1913-ம் வருஷம் 100-க்கு 72 அரசாங்க உத்தியோகங்கள் நாட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. 1934-ம் வருஷம், பிலிப்பைன் சுதந்தரச் சட்டம் அமெரிக்க சட்ட சபையில் நிறைவேறிவிட்டது. 1935-ம் வருஷம் நவம்பர் 15-ந் தேதி இச் சட்டம் அமுலுக்கு வந்தது. ஆனால் 1946-ம் வரைக்கும் அமெரிக்கா சில விஷயங்களில், அதாவது அயல் நாட்டு சமாச்சாரம், பொருளாதாரம், இறக்குமதி, ஏற்றுமதி வரிகள், முதலியவற்றில் அதிகாரத்தைத் தன்னிடம் வைத்துக்

கொண்டது. ஆனால், ஜப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் போக்கைக் கண்ட பிலிப்பைன் நாட்டு மக்கள் பூரண சுதந்தரம் தங்களுக்குக் கொடுத்து விட்டால், ஜப்பானுக்குத் தங்களுடைய நாடு பலியாய் விடும் என்று அஞ்சினார்கள். அதனால், அமெரிக்காவின் பாதுகாப்பு தங்களுக்கு அவசியம் வேண்டும் என்று உணர்ந்தார்கள். இந்த யுத்தத்தில் பிலிப்பைன் அரசாங்கமும், மக்களும், அமெரிக்காவுக்குச் சகல உதவியும் செய்து வருகிறார்கள்.

பிலிப்பைனைப் பாதுகாப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகள் 1934-ம் ஹு டிசம்பர்மீத்துக்குப் பிறகு தான் ஆரம்பிக்கப்பட்டன. ஏனென்றால் 1922-ம் ஹு, ஐந்து வல்லரசு உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. அதன்படி, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் முதலிய நாடுகள் பசிபிக் சமுத்திரத்தில் உள்ள ராணுவ பலத்தையாவது, கடற் படைத் தளங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளையாவது, அதிகப்படுத்துவதில்லை என்று ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தத்திலிருந்து 1934-ம் ஹு க் கடைசியில் ஜப்பான் விலகிக்கொண்டது. இது 1936-ம் வருஷம் அமுலுக்கு வந்தது. அதற்குப் பிறகு தான் பிலிப்பைன் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய அமெரிக்கா தகுந்த கவனம் எடுக்க ஆரம்பித்தது.

அமெரிக்க ராணுவ பலம்

சாதாரண சமாதான காலத்தில் பிலிப்பைன் பிரதேசத்தில் உள்ள அமெரிக்கக் கடற்படையின் விவரங்கள் பின் வருமாறு :—

10,000 டன் 'குரூய்சர்' யுத்தக் கப்பல் 1 ; 7,000 டன் 'க்ரூய்சர்' யுத்தக் கப்பல் 1 ; நாசகாரிக் கப்பல்கள் 12 ; நீர் மூழ்கிக் கப்பல்கள் 12.

இதல்லாமல் இன்னும் அநேக துணைக் கப்பல்களும் இருந்தன. இந்தப் படை பிறகு பலப்படுத்தப்பட்டது. 1939-ம் வருஷம் ஒரு விமானந் தாங்கும் கப்பல், அநேக பெரிய வெடிகுண்டு விமானங்கள், அநேக நீர் மூழ்கிக் கப்பல்கள், பல சிறு கப்பல்கள், அமெரிக்கக் கப்பற் படைக்குச் சேர்க்கப்பட்டன.

சாதாரண காலத்தில் பிலிப்பைனில் உள்ள அமெரிக்கத் தரைப் படை 10,000 சிப்பாய்கள் கொண்டது. இதில் 4,000 அமெரிக்கர்களும் 6,000 பிலிப்பைனோக்களும் இருக்கிறார்கள். 1941-ம் ஹுத்துக்குப் பிறகு 85 ஆகாய விமான நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏராளமான போர் விமானங்கள் அமெரிக்காவிலிருந்து வந்து சேர்ந்தன. தரைப்படை உதவி ஆகாய விமானப் படைகள் இரண்டு அமெரிக்காவிலிருந்து பிலிப்பைனுக்கு மாற்றப்பட்டன. ஸ்வீடனுக்காகச் செய்யப்பட்ட 70 விமானங்கள் பிலிப்பைனுக்குச் சென்றன. 1941-ம் ஹு மேமீத்தில் 6 மாதத்திற்குள் 1,000 விமானங்கள் பிலிப்பைனில் இருக்கும் என்று கணக்கிடப்பட்டது. பிலிப்பைனின் தலை நகராகிய மணிலா ஒரு பிரம்மாண்டமான விமானத் துறைமுகமாய்விட்டது.

அமெரிக்காவிடமிருந்து அரசாங்க அதிகாரம் பிலிப்பைன் மக்களுக்குக் கொடுப்பதற்கு முன், ஒரு சுதேசப் படை அமெரிக்க தளகர்த்தரால் திரட்டப்பட்டது. அது 7,000 பேர் கொண்டது. வருஷா வருஷம் 40,000 பேர் ராணுவப்பயிற்சி பெறுகிறார்கள். 1941-ம் ஹு மார்ச்சுமீ ஒரு லட்சம் இளைஞர்கள் 'ரிசர்வ்' பட்டாளத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றார்கள். வருஷ ராணுவச் செலவு 1½ கோடி 'பீசோ' (பிலிப்பைன் நாணயம்) ஆகிறது.

மணிலாவின் பாதுகாப்பு

பிலிப்பைனின் தலை நகராகிய மணிலா ஒரு பெரிய விரிகுடாவின் முகப்பில் இருக்கிறது. அமெரிக்காவின் ஆசிய கடற்படை முழுவதும் இருக்கும்படியாக அவ்வளவு விசாலமாக இந்த விரிகுடா இருக்கிறது. அருகில் இருக்கும் காரிசிடர் தீவில் உள்ள ஒரு கோட்டை மணிலாவுக்குள்ள பல பாதுகாப்புகளில் ஒன்று. சமாதான காலத்தில் இக் கோட்டையில் 4,500 சிப்பாய்கள் இருப்பார்கள். இப்போது இந்த எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது. மணிலாவுக்கு தெற்கில் உள்ள கவீட் விரிகுடாவில் கடற்படை தங்குமிடங்களும், வெடி குண்டு சாமான் 'டிபோ'க்களும், கப்பல் 'ரிபேர்' சாலைகளும் இருக்கின்றன.

சில மாதங்களாக மணிலாவில் அடிக்கடி பாதுகாப்பு மகா நாடுகள் கூடி வருகின்றன. பிரிட்டன், அமெரிக்கா, சீனா, டச்சுக் கிழக்கிந்திய தீவுகள் இவற்றில் கலந்து கொண்டன. பிலிப்பைன் தீவுகளைப் பாதுகாப்பது சம்பந்தமாக சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த நான்கு நாடுகளின் ஒற்றுமை முயற்சிக்கு 'ஏ. பி. சி. டி. பிரண்ட்' என்று பெயர். இதன் பலத்தைப்பற்றியும், இதன் நாடுகளின் சிறந்த பாதுகாப்புக்சொத்தளமாக இருக்கும் சிங்கப்பூரைப் பற்றியும் லண்டன் "டைம்ஸ்" நிருபர் சில விவரங்களைக் கூறுகிறார். அவை பின் வருமாறு :—

சென்ற 18 மாதகாலமாக மலேயாவில் தங்கள் ராணுவ பலத்தை அதிகரித்துக்கொள்வதற்காக பிரிட்டிஷார் இடைவிடாத முயற்சிகள் செய்து வந்திருக்கின்றனர். பிலிப்பைன் தீவுகள், டச்சு கிழக்கிந்தியத் தீவுகள், இந்த இடங்களிலும் ராணுவ பலம் அதிகரிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. இதனால் இந்த நாடுகளின் தனித்தனி ராணுவ பலம் அதிகரித்ததோடு மட்டுமல்லாமல், மேற்கில் எப்படி ஒற்றுமை உண்டாயிற்றோ அதைப்போல கிழக்கிலும் ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது 'ஏ. பி. சி. டி.' கோஷ்டியில் சம்பந்தப்பட்ட நாடுகள் நெருங்கிய தொடர்புடன் இருக்கின்றன.

சிங்கப்பூர் கொத்தளம்

சிங்கப்பூர் எப்படி இந்தியாவின் கீழ்க்கொத்தளமோ, அதே மாதிரி ஆஸ்திரேலியாவின் வடக்குக் கொத்தளமுமாகும். சிங்கப்பூரும், மலேயாவும் எதிரிகள் கையில் விழாமல் இருந்தால்தான் இவ்விரண்டு நாடுகளுக்கும் நல்லது.

கடற்படை விஷயமாகத்தான் சிங்கப்பூர் மிகவும் முக்கியம் வாய்ந்தது. இது மிகவும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்திருப்பதற்கே முக்கிய காரணம் இத்தீவின் வட கிழக்குப் பாகத்தில் அமைக்கப் பெற்றுள்ள பெரிய கடற்படைத்தளம்தான். இத்தளத்தில் உள்ள 22 சதுர மைல் ஜலப் பரப்பில் பிரிட்டிஷ் கடற்படை, அமெரிக்கக் கடற்படை, இரண்டும் இருக்கலாம். இங்கிலாந்திலிருந்து 8,000 மைல் தூரம் கொண்டுவரப்பட்ட மிதக்கும் ரேவில் 45,000 டன் எடையுள்ள யுத்தக் கப்பல் ஒன்று நிறுத்தி வைக்கப்படலாம். நாசகாரிகள், நீர்மூழ்கிகள் இவற்றைப் பழுது பார்ப்பதற்காக ஒரு சிறிய மிதக்கும் ரேவு இருக்கிறது. இன்னும் கப்பலின் கீழ்ப்பாகத்தைச் சுத்தம் செய்வதற்காக இன்னொரு ரேவு இருக்கிறது. இதில் "க்வீன் மேரி," "க்வீன் எலிசபெத்" போன்ற கப்பல்களுக்கு இடம் கொடுக்க முடிவதோடு, கொஞ்சம் இடமும் பாக்கி இருக்கும். சென்ற வருஷத்தில் இவ்விரண்டு கப்பல்களும் சிங்கப்பூருக்கு வந்திருந்தன. யந்திரங்கள், துப்பாக்கிகள் இவற்றைப் பழுதுபார்ப்பதற்குப் பட்டறைகள் உள்ளன. கடற்படை அதிகாரிகளின் உபயோகத்திற்காகவும் செய்தி அனுப்புவதற்காகவும் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு ரேடியோ ஸ்டேஷன் இருக்கிறது. கப்பலில் உணவு வகைகள் ஏற்றுவதற்கும், கப்பலுக்கு பெட்ரோல் ஊற்றுவதற்கும் துறை முகங்கள் உள்ளன. எண்ணெய், தளவாடங்கள் முதலியவற்றை வைத்துக்கொள்வதற்கு நிலவறைகள் இருக்கின்றன.

பெரும்பாலும் கடல் யுத்தமே !

ஜப்பான் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் தொடுத்திருக்கும் யுத்தம் பெரும்பாலும் கடல் யுத்தமாக இருக்கும். எதிரியின் கடற்படையின் பலத்தைக் குலைப்பதற்காகத்தான் விமானத் தாக்குதல்கள் நடக்கும். அமெரிக்கக் கடற்படை கிழக்கே வந்து ஜப்பானைத் தாக்க விரும்பும் பட்சத்தில், அது சிங்கப்பூரிலிருந்துதான் யுத்தம் புரியவேண்டியிருக்கும். மணிலா விரிகுடாவில் உள்ள கவைட் 'தீவில்' பெரிய யுத்தக்கப்பல்களுக்கு வேண்டிய வசதி கிடையாது. ஹவாய் கிழக்கே வெகு தூரத்தில் இருப்பதால் அங்கிருந்து நடவடிக்கைகள் நடத்த முடியாது. ஆகவே சிங்கப்பூர் ஒன்று தான் பாக்கியுள்ளது. பசிபிக் யுத்தத்தில், இது அமெரிக்கர்கள், பிரிட்டிஷார் இரண்டு பேருக்கும் முக்கியம் வாய்ந்ததாயிருக்கும்.

முக்கியமான தளம்

சிங்கப்பூரின் முக்கியம் பின்கண்ட கேள்வியால் நன்கு புலப்படும். "சிங்கப்பூர் எதிரி வசப்பட்டுவிட்டால் என்னாகும் ?" என்று கேள்வி கேட்கப்படுகிறது என்று வாதத்துக்காக வைத்துக்கொள்வோம். இந்தக் கேள்விக்குப் பதில் தெரிந்ததே. மேலே பசிபிக் சமுத்திரத்தில், பிரிட்டிஷ் கடற்படையாலும், அமெரிக்கக் கடற்படையாலும் ஒன்றும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளமுடியாது. ஏனெனில் அவர்களுக்குத் தளம் ஒன்றும் இருக்காது. ஆஸ்திரேலியாவில்கூட பெரிய கப்பல்களின் அடிப்பாகத்

தைச் சுத்திசெய்வதற்குவேண்டிய தளம் கிடையாது. ஆகவே அப்பொழுது இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, இவை எல்லாவற்றுக்கும் ஆபத்துத்தான். மலேயா, கிழக்கிந்தியத் தீவுகளைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை. ஆகவே தேசங்கள் மாத்திரம் அல்ல, கண்டங்களின் விதி, சிங்கப்பூரையே பொறுத்திருக்கிறது.

பாதுகாப்புத் துருப்புகள்.

சிங்கப்பூரைப் பாதுகாப்பதற்கு ஏராளமான துருப்புகள் மலேயாவில் இருக்கின்றன. இவைகளில் இந்தியத் துருப்புகள்தான் மிக அதிகம். இவர்களும் இவர்களுடன்கூட உள்ள பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, மலேயத் துருப்புகளும், எதிரி படையெடுக்கக்கூடிய எல்லா வழிகளையும் அடைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியத் தற்காப்பின் முக்கிய கிழக்கத்தியக் கொத்தளம் சிங்கப்பூர் என்பதை இன்னும் விரிவாகச்சொல்லவேண்டியதில்லை.

கிழக்குக் கடற்கரை, தரை, கடல், இரண்டு வித நடவடிக்கைகளுக்கும் சௌகரியமாக அமைந்துள்ளது. சீனாவில் ஜப்பானுக்கு கிடைத்த அனுபவத்தைப் பார்க்கும் போது, இரண்டும் நடக்கக்கூடியன என்றே தோன்றுகிறது. சமீபத்தில் நடந்த ஒரு பயிற்சியில் இந்தியத் துருப்புகள், படையெடுப்பவர்கள், ஐந்தாம் படையினர், நாச வேலைக்காரர்கள் ஆகிய இவர்களின் பாகத்தை எடுத்துக் கொண்டனர். தற்காப்புகள் எல்லாம் இவ்வாறு சோதிக்கப்பட்டன.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை எதிர்பார்த்து இரண்டு வருஷங்களாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அவை இப்பொழுது முடிந்து விட்டன.

இந்தியத் துருப்புகளின் சௌகரியம்

மலேயாவின் வடமேற்கு எல்லையிலும் இந்தியத் துருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ரயில்வேக்களும், நல்ல ரஸ்தாக்களும் இருப்பதால் தாய்லாந்து வழியாக படையெடுக்க முடியும். ஆனால் சேதம் அதிகம் ஏற்படும். தீவுத் கோட்டைக்குள்ளும் இந்தியத் துருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தற்கால யுத்தத்துக்கு வேண்டிய எல்லாவித ஆயுதங்களும், யந்திர பீரங்கிகளும் இந்தியத் துருப்புகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதைத்தவிர மலைப்பிராந்திய சண்டையில் இந்தியர்கள் பெயர் போனவர்கள். காட்டுப் பிரதேச யுத்தத்தில் இந்தியர்கள் மிகவும் கெட்டிக்காரத்தனம் வாய்ந்தவர்களாகி விட்டனர். மேற்கு ஆப்பிரிக்கப் புதர் சண்டை முறைகள் மலேயாவிக்கு ஏற்றபடி மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. எதிரி துருப்புகள் முதல் தரமானவையாயிருந்தாலும், அவர்கள் இப்பிரதேசத்துக்குப் புதியவர்களாயிருப்பார்களாதலால் அவர்கள் கெட்டிக்காரத்தனம் இந்தியத் துருப்புகளிடம் பலிக்காது. இத் துருப்புகளில் எல்லா மாகாணத்தவரும், எல்லா ஜாதியினரும் உள்ளனர். பல சமஸ்தானங்களிலிருந்து அநேகர் வந்திருக்கிறார்கள். நம் துருப்புகள் அதிக மனோ உறுதியுடன் காணப்படுகிறார்கள்.

மேற்கு பாலைவனத்தில் ஜெர்மன் கைதிகள்

வட ஆப்பிரிக்காவில் உள்ள தோப்ருக் பிரிட்டிஷ் துருப்புகளாலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய துருப்புகளாலும் திறமையாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. நமது துருப்புகள் முன்னேறிச்சென்று எதிரிகளோடு போர்புரிந்து பல வெற்றிகளை அடைந்து, ஜெர்மானியரைக் கைதிகளாகப் பிடித்திருக்கின்றன. தோப்ருக்கில் அநேக ஜெர்மன் கைதிகள் இருக்கிறார்கள். அவர்களில் சிலரை படத்தில் காணலாம்.

1.20-மணிக்கு வெடிகுண்டு, 5-மணிக்கு சமாதானப்பேச்சு !

ஜப்பானின் மோசடியான தாக்குதல்

அமெரிக்காவும், பாதுகாப்பு ஏற்பாடுகளும்

அமெரிக்கா, ஒரு பக்கம் ஜப்பானுக்கு எதிராகவும், மற்றொரு பக்கம் ஜெர்மனிக்கும், இத்தாலிக்கும் எதிராகவும், யுத்தம் நடத்திக்கொண்டு வருகிறது. இதற்காக பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அவைகளில் முக்கியமானவை பின் வருமாறு :—

1. அமெரிக்காவுக்கு வெளியில், உலகத்தில் எந்த பாகத்துக்கும் அமெரிக்கப் பட்டாளங்கள் அனுப்பப்படலாம என்ற மசோதா அமெரிக்க சட்டசபையில் யாதொரு எதிர்ப்பும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது. சில காலத்துக்கு முன் இந்த மசோதா வந்திருந்தால், அதிக எதிர்ப்பு இருந்திருக்கும். ஆனால் இப்போது மசோதா நிறைவேறியது ஒரு ஆச்சரியமாகக்கூட கருதப்படவில்லை. அமெரிக்காவிலிருந்து ஒரு பெரிய பட்டாளம் இப்போது வெளியில் அனுப்பப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதற்கு இன்னும் சரியான காலம் வரவில்லை. தகுந்த காலத்தில் அமெரிக்கா தன்னுடைய பட்டாளங்களை வெளியில் அனுப்பும் என்பதில் சந்தேகமில்லை.

குத்தகை கடன் திட்டம்

2. அமெரிக்காவின் குத்தகை—கடன் திட்டம் இனிமேலும் தொடர்ந்து நடக்கும் என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் காரியாலயத்திலிருந்து அறிவிக்கப்பட்டது. ஆனால் முன்னிருந்ததுபோல தொடர்ச்சியாக 'சப்ளை' அனுப்புவது சுலபமல்ல.

இப்போது அமெரிக்க உற்பத்திவேலை துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. அமெரிக்க "பாதுகாப்பு திட்டம்" "வெற்றித் திட்ட"மாக மாற்றப்பட்டது. தொழிற் சாலைகளில் அதிக நேரம் வேலை செய்கிறார்கள். தேச யுத்த முயற்சி தீவிரமாக நடக்கிறது. அமெரிக்காவும், நேசநாடுகளும், 'சப்ளை' விஷயங்களுக்கு வேண்டியதை செய்து, முழு வெற்றியடைவதற்கு முயற்சி செய்து வருகின்றன.

3. அமெரிக்கக் கடற்படை 100-க்கு 30 வீதம் அதிகப்படுத்தப்படவேண்டும் என்ற சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன்படி கப்பற்படை கீழ்க்கண்ட விதமாக அதிகரிக்கப்படும் :—

9 லட்சம் டன் புதிய கப்பல்கள் கப்பற்படைக்குச் சேர்க்கப்படும். 45,000 டன் உள்ள ஏழு அல்லது எட்டு யுத்தக்கப்பல்கள், 29,000 டன் உள்ள விமானந் தாங்கும் கப்பல்கள், 7,000 டன் உள்ள 27 'குரூய்சர்' யுத்தக் கப்பல்கள், 80-க்கு மேற்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்கள்—இவைகளெல்லாம் பசிபிக்கடலிலுள்ள அமெரிக்கக் கப்பற்படையில் சேர்க்கப்படும். இவையல்லாமல், பசிபிக்கடலில் பிரிட்டிஷ் கப்பற்படை வேறு தனியாக இருக்கிறது.

ராணுவப் பயிற்சி

4. வேண்டியபோது 70 லட்சம் ஆள்களை அமெரிக்கா பட்டாளத்தில் சேர்த்துக்கொள்ளலாம். 19 வயதிலிருந்து 44 வயது வரைக்கும் உள்ள ஆண் பிள்ளைகளுக்கு கட்டாய ராணுவப் பயிற்சி செய்வதற்காக அமெரிக்க சட்டசபை சட்டம் நிறைவேற்றினால் இந்தக் காரியம் நிறைவேறும்.

5. மாதத்திற்கு 2,000 யுத்த விமானங்கள் அமெரிக்காவில் செய்யப்படுகின்றன. சென்ற மாதம், 2,400 விமானங்கள் செய்யப்பட்டன. 2,800 'டாங்கி'கள் ஒவ்வொரு மாதமும் செய்யப்படுகின்றன.

6. பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், சீன தேசத்தலைவர் மார்ஷல் சியாங்கே ஷெக்குக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். அதில், சீனாவும் அமெரிக்காவும் இதர நாடுகளும் நேசப்பான்மையுடன் ஆக்கிரமிக்கும் நாடுகளை எதிர்த்து வெற்றிபெற வேண்டியதற்கு ஒன்று சேர்ந்துள்ளன என்று குறிப்பிட்டிருக்கிறார்.

7. பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அமெரிக்க சட்டசபைக்கு அனுப்பிய செய்தியில் கீழ்க்கண்ட முக்கியமான விஷயங்கள் குறிப்பிடத்தக்கவை :—

(அ) 7 கோடி ஜப்பானியர்கள் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நாட்டு மக்களில் 70 கோடிக்கு சமமானவர்கள் என்று ஜப்பான் அறிவித்திருக்கிறது.

(ஆ) ஜப்பானிய முதல் மந்திரி கொள்கை விஷயத்தில் ஏதாவது ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொள்வதாயிருந்தால், அவரைச் சந்திப்பதற்காக அநேக ஆயிரம் மைல்தூரம் போவதற்கு பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தயாராயிருந்தார்.

சமாதான மோசடிப்பேச்சு.

(இ) ஜப்பான் யுத்தத்தைத் தொடங்கிய பிறகுதான், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் கடிதத்துக்குப் பதில் அனுப்பிற்று. பெர்ல் துறைமுகத்தைத் தாக்கிவிட்டு, பிறகு அதாவது 3-மணி 40 நிமிஷம் கழித்து சமாதானத்தை விரும்புவதாக ஜப்பான் கூறிக்கொண்டிருந்தது. ஜப்பானிய ஆகாய விமானங்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் டிசம்பர்மீ 7உ மாலை 1-20 மணிக்கு பெர்ல் துறைமுகத்தை வெடி குண்டுகளால் தாக்கின. அதே நாள் மாலை 5-மணிக்கு ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி, டோக்கியோவில் அமெரிக்கஸ்தானீகர், மிஸ்டர் ஜோசப் குரூவைச் சந்தித்து, ஜப்பானியச் சக்கிரவர்த்தி சமாதானத்தை விரும்புவதாகவும், இது சம்பந்தமாக தொடர்ந்து முயற்சி செய்யும்படி ஜப்பானிய அரசாங்கத்துக்கு அறிவித்ததாகவும், தெரிவித்தார்.

இந்தியாவில் யுத்த சாமான் உற்பத்தி

ஒரு வாரத்தில் ரூ. $2\frac{1}{4}$ கோடிக்கு 'ஆர்டர்'

நம் நாட்டில் செய்யப்படும் பல சாமான்கள்

இந்தியாவின் யுத்ததொழிற்சாலைகளில் உற்பத்தி வேலை அதிகரித்துக்கொண்டு வருகிறது. பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடிகுண்டு போடும் யந்திரங்கள், வெடிகுண்டுகள், பீரங்கி வண்டிகள், துப்பாக்கிக் கத்திகள், பிரென் பீரங்கிகள் வைப்பதற்கு இரும்பு முக்காலிகள், சமையல் செய்வதற்கு அடுப்புகள், பாத்திரங்கள், இன்னும் யுத்தத்திற்கு வேண்டிய அநேக சாமான்கள் இந்தியாவில் செய்யப்படுகின்றன.

பீரங்கி வண்டிகளுக்கு வேண்டிய பாதுகாப்புத் தகடுகள் இந்தியாவில் உள்ள ஒரு யுத்த தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன.

"சாட் பீல்டு திட்டம்" என்ற யுத்த தொழிலபிவிருத்தித் திட்டத்தின்படி, ஒரு புதிய ஸ்டீல் தொழிற்சாலை, விமான வெடிகுண்டுகள் செய்யும் தொழிற்சாலை, பீரங்கிகள் செய்யும் தொழிற்சாலை, முதலிய பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சென்ற சில வாரங்களில், பீரங்கிகள், பீரங்கி வண்டிகள், யந்திர பீரங்கி முக்காலிகள், வெடிகுண்டுகள், வெடிகுண்டு உறைகள் முதலியன செய்வதில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது.

ரயில்வே தொழிற்சாலைகளும், இதர வர்த்தகத் தொழிற்சாலைகளும், வெடிகுண்டுகள், டாங்கி எதிர்ப்பு வெடிகுண்டுகள், எண்ணெய் அடுப்புகள் முதலியன செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளன. அவைகளுடைய உற்பத்தி சாமான்கள் அதிகப்படியாய்க்கொண்டே வருகின்றன.

இஞ்சினீயரிங் சாமான்கள்.

இஞ்சினீயரிங் பகுதிகளில் நடக்கும் வேலையைப் பற்றி முக்கியமாகக் கூறவேண்டியிருக்கிறது. மத்திய கிழக்குப் பிரதேசத்துக்கும், கிழக்குப்பகுதி நாடுகளுக்கும் தேவையான சாமான்களில் பல இந்தியாவில் செய்யப்பட்டன. தங்கும் கூடாரங்கள், பெட்ரோல் டாங்கிகள், லாரி டாங்கிகள், ஹாமில்டன் பாலங்கள், ஊஞ்சல் பாலங்கள், சாமான் தூக்கும் 'கிரேன்'கள், யுத்த வண்டிகளின் 'பாடி'கள், பம்புகள், தபால் தந்தி சாமான்கள், ரயில்வே சாமான்கள், இவைகள் செய்யப்பட்டு ஏராளமாக வெளியில் அனுப்பப்படுகின்றன.

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் இந்திய அரசாங்கத்தின் 'சப்ளை' இலாகாக்காரர்கள் ரூ. $2\frac{1}{4}$ கோடிக்கு யுத்த சாமான்கள் வாங்குவதற்கு 'கண்ட்ராக்ட்' கொடுத்திருக்கிறார்கள். இதனால் எவ்வளவு பிரம்மாண்டமான வேலை நடக்கிறதென்பது தெரியவரும்.

கப்பல் கட்டும் தொழிலிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 'திருவாங்கூர்' என்ற கப்பல் இந்தியாவில் கட்டப்பட்டது. இந்த மாதத்தில் இன்னும் இரண்டுகப்பல்கள் கட்டப்பட்டு மிதக்கவிடப்படும்.

3 கோடி ரூபாய் பெறும்படியான மரங்கள் 'சப்ளை' செய்யும்படி கேட்டிருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான மோட்டார் வண்டிகள் பட்டாளங்களின் தேவைக்காக அனுப்பப்பட்டன. ஒவ்வொரு வாரமும் நூற்றுக்கணக்கான வண்டிகள் தயார் செய்யப்படுகின்றன.

வாராவாரம், கிழக்குப் பகுதி நாடுகள் அதிகப்படியான யுத்த 'ஆர்டர்'கள் இந்தியாவுக்குக் கொடுக்கின்றன. சென்ற இரண்டு வாரங்களில் 25 கோடி கஜம் துணி வகைகளும், லட்சக்கணக்கான உடுப்பு வகைகளும், ஆயிரக்கணக்கான ரயில்வே சாமான்கள், இஞ்சினீயரிங் சாமான்கள், இதர ஸ்டோர் சாமான்கள், சோப்பு, கழுத்து 'டை' யிலிருந்து ரயில் வண்டிகள், பாலங்கள் வரைக்கும் செய்யும்படி இந்தியாவுக்கு 'ஆர்டர்'கள் கிடைத்திருக்கின்றன.

இந்தியாவின் முன்னேற்றம்.

துணி வகைகள், தோல் சாமான்கள், உணவுப் பொருள்கள், மரம் ரசாயனப் பொருள்கள், வைத்திய சாமான்கள், மருந்துகள் முதலியன செய்வதிலும் இந்தியா முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

விமான விரிப்புக்குடைகள் செய்வதன் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தார் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

துணிகள் நெய்யும் தொழிற்சாலைகள், மாதத்தில் 80 லட்சம் ராணுவ உடுப்புகள் தயார் செய்கின்றன. ஒரு வருஷத்துக்குமுன் இருந்ததைவிட இது நான்கு மடங்கு அதிகம்.

உணவுப்பொருள்களில், உருளைக்கிழங்கு வற்றல், பார்லி, பிஸ்கோத்து, கோல்டன் சர்பத், சிகரெட்டு,

புகையிலை முதலியன ஏராளமாக இந்தியா 'சப்ளை' செய்கிறது. 118 கோடி 'சிகரெட்'டுகள் 'சப்ளை' செய்யும்படி இந்தியாவுக்கு ஒரு 'ஆர்டர்' கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் விமானப்படையில் இந்தியர்கள்

சுமார் 100 மாணவர்கள் யுத்தவேலையில் ஈடுபடுதல்

கருப்பன்—கிராம முனிசீப்பு பேச்சு

இந்தியாவுக்கு நல்ல பேர்

ஒரு நாள் சாயங்காலை வேளை, மழையோ சொல்லி முடியாது. 'சள, சள,' என்று விடாமல் பெய்து கொண்டிருந்து. கருப்பன் என்ற குடியானவன், அவசரம் அவசரமாக, தன்னுடைய வயற்காட்டிலிருந்து ஓடிக்கொண்டிருந்தான். மழை கடுமையாகப் பெய்வதற்குள் வீட்டுக்குப்போய்ச் சேர்ந்துவிடலாம் என்று நினைத்தான். ஆனால் வழியில் மின்னலும் இடியும், காற்றும் மழையும், கலந்து அடித்த வேகம் அவனைத் தடைப்படுத்திவிட்டது. 'போதாக்குறைக்குப் பொன்னியம்மன் குறை' என்றது போல, இவை யெல்லாவற்றோடுங் கூட மின்னிருட்டு. ஒரே 'கர்கும்' என்று இருட்டு வயற்காடுகளையும், கிராமத்திலுள்ள வீடுகளையும் மூடிக்கொண்டது.

தூரத்தில் கிராமச்சாவடிக்குள் மின் மினிப்பூச்சைப்போல ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கருப்பன் ஓடோடியும் வந்து கிமாச்சாவடிக்குள் நுழைந்தான். மழை நிற்கும்வரைக்கும் சாவடியில் ஒதுங்கியிருந்து, பிறகு வீட்டிற்குப் போகலாம் என்று நினைத்தான். கொஞ்ச நேரத்துக்குள் மற்றொரு ஆள் சாவடிக்குள் நுழைந்ததைக் கண்டான். வந்த ஆள் அவ்வூரின்கிராம முன்சீப்பு.

யுத்த சமாச்சாரம்

"என்னடா கருப்பா, மழையில் அகப்பட்டுக் கொண்டாயா?" என்றார் கிராம முன்சீப்பு.

"ஆமாங்க, சாமி, மழையிலே தொப்பரகட்டயா நெனெஞ்சி போனேங்க. ஒரே ஓட்டமா ஊட்டுக்கு ஓடிப்பூடலாமின்னு பாத்தேனுங்க; முடியலிங்கே," என்றான் கருப்பன்.

கிராம முனிசீப்பு: "ஆமாம், உன்னைப்பார்த்து அதிக நாளாச்சே! கிராம வாசக சங்கக் கூட்டத்துக்கு இப்போது என் வருவதில்லை? யுத்த சமாச்சாரங்களிலெல்லாம் நீ மிகுந்த கவனம் காட்டுபவனுச்சே. வரவர மாமியார் என்னமோ ஆனாள் என்று சொல்வார்களே; அதைப்போல நீ வரவர முழுச்சோம்பேரியாய் விட்டாய்போலிருக்கிறதே?"

கருப்பன்:—"அப்படி யெல்லா மில்லீங்க. ஊட்லே இப்போ தொந்தரவு சாஸ்தீங்க. எங்கண்ணன் மவனுக்கும் எனக்கும் பாகம் பிரியலை. அவன் பெரிய 'கலாட்டா' பண்றானுங்க. சட்டி பானையை போட்டு ஒடைக்கிறானுங்க. வெளி ஊர் சண்டையைப் பத்திக்கேக்கலாமிண்ணா, முடியலிங்க. ஊட்டுக்குப் போனா, நடக்கற சண்டை காதுகூட செவிடாப் பூடுங்க. மேலே யிருந்து வெடிகுண்டு போடறாங்க என்று சொல்றாங்களே, அது கூட அவ்வளவு சத்தம் செய்யாது இண்ணு நெனைக்கிறனுங்க."

கி.மு.:—இன்றைக்கு ராத்திரி, நம்முடைய வாசகர் சங்கத்தில், வெடிகுண்டுபோடும் விமானங்களைப்பற்றியும், அதில் சேர்ந்திருக்கும் நம்முடைய நாட்டுப் பையன்களைப்பற்றியும் சொல்லுவார்கள். சங்கக்கூட்டம் ஆரம்பிப்பதற்குள், மழை நின்றுவிடும் என்று நினைக்கிறேன். நம்முடைய கிராமப் பள்ளிக்கூடத்தில்தான் கூட்டம் கூடும். உனக்கு தான் அந்த இடம் தெரியுமே, வீட்டுக்குப் போய்விட்டு வருகிறாயா?

இந்திய விமானிகள்

கரு:—ஊட்டுக்குப்போனா, அவ்வளவு தானுங்க. கூட்டத்துக்கு வரமுடியாதுங்க. அங்கே சொல்ற சமாச்சாரத்தைக் நீங்க சொல்லுங்க; எங் காதாலே கொஞ்சங் கேக்கெறேன். இந்த மழை நிக்கிற வரைக்கும் சண்டை சமாச்சாரம் பேசலாங்க.

கி.மு.:—சரி, நான் சொல்லுகிறேன். நீ கேள். இன்றைக்கு பேசப்போகும் விஷயம், 'பிரிட்டிஷ் விமானப் படையும், அதில் சேர்ந்திருக்கும் இந்தியர்களும், என்பதுதான். பிரிட்டிஷ் விமானப் படையைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?

கரு:—ஆமாங்க. ஜெர்மனியானுடைய விமானங்களை தொம்சம் சேஞ்ச படை தானுங்களே? நான் கேட்டிருக்கிகேனுங்க. ஜெர்மனிலே போய் எத்தனியோ தடவை வெடிகுண்டுகளை, மழையாட்டமா—இப்போ பேயர மழையாட்டமா—போட்ட படையைப்பற்றி மின்னே வந்தப்போ கேட்டேன். இப்போ நீங்க சொல்லப்போறது புது சமாச்சாரமா தோணுதுங்க. நல்லாசொல்லுங்க நான் கேட்கிறேன்.

கி.மு:—சீமைக்கு அநேக இந்தியர்கள் படிக்கப் போயிருக்கிறார்கள். அவர்கள் பிரிட்டிஷ் விமானப் படையில் சேர்வதில் ஆவலாயிருக்கிறார்கள். யுத்தம் ஆரம்பித்தபிறகு, நம்முடைய நாட்டுக்குத் திரும்பி வரமுடியாமல் 500 மாணவர்கள் இருக்கிறார்கள். 'மாணவர்கள்' என்றால் பள்ளிக்கூடத்துப் பையன்கள் என்று அர்த்தம். இந்த 500 பேரில் சுமார் 100 பேர் பிரிட்டிஷ் விமானப் படையில் சேர்ந்து வேலை செய்து வருகிறார்கள்; இன்னும் அநேகர் சேர்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

கரு:—அப்படிங்களா? சேர்ந்தால் நல்ல சம்பளம் கொடுப்பார்களா?

'கமிஷன்டு ஆபீசர்கள்'

கி.மு:—ஆகா, கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இந்த 100 பேரில், சுமார் 40 பேர் பிரிட்டிஷ் விமானப் படையில் உத்தியோகஸ்தர் வேலைகளில் இருக்கிறார்கள். அவர்களுக்குக் 'கமிஷன்டு ஆபீசர்'கள் என்று பெயர். சிலர் விமான ஓட்டிகளாகவும், சிலர் விமான யந்திர வேலைக்காரர்களாகவும், வேறு சிலர் உடற் பயிற்சி உபாத்தியாயர்களாகவும் இருக்கிறார்கள். சிலர் உலகத்திலேயே அதிக வேகமாகப் பறக்கச்கூடிய விமானங்களை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

கரு:—அவ்வளவு கெட்டிக்காரத்தனமாக நம் மோட பசங்கள் வேலை செய்றாங்கோ இண்ரதைக் கேக்க ரொம்ப சந்தோசம்! அவங்க எல்லாம் சௌகரியமா இருக்காங்களா?

கி. மு:—சௌக்கியமாக இருக்கிறார்கள். அபாயம், தீமை, திடுக்கிடும் விஷயங்கள், இவைகள் எல்லாம் அவர்களுக்கு ஒரு ஆனந்தமாக இருக்கிறது. பள்ளிக்கூடத்துப் புத்தகங்களை எல்லாம் எடுத்து தூர வைத்துவிட்டார்கள். பிரிட்டிஷ் விமானப் படையினருடன் சேர்ந்து ஒற்றுமையான வாழ்க்கை, ஒழுங்கான சாப்பாடு, நல்ல சிநேகிதம், இவைகளை இந்திய மாணவர்கள் அனுபவிக்கிறார்கள். பரீட்சைகளில் நன்றாகத் தேறுகிறார்கள். பிரிட்டிஷ் மாணவர்களைப்போல நெருக்கமான சண்டைகளில் கலந்துகொள்வதற்கு ஆசைப்படுகிறார்கள். இராத்திரி காலங்களில் சண்டை போடுவதற்கு இந்தியர்கள் கற்றுக்கொள்ளுகிறார்கள். இதற்கு கூர்மையான பார்வை, நரம்பு உறுதி, முரட்டுத்தனமான தைரியம் முதலியன வேண்டியிருக்கிறது. இந்தியாவிலிருந்து சென்ற மாணவர்களில், அநேகருக்கு இப்படிப்பட்ட குணங்கள் சுபாவத்திலேயே இருக்கின்றன. இஞ்சினீயர் படிப்பு படித்த அநேக இந்திய மாணவர்கள் பிரிட்டிஷ் விமானப் படையின் தரை வேலைகளில் அமர்ந்திருக்கிறார்கள். அதாவது, ஆகாயத்தில் பறக்காமல் கீழே தரையில் இருக்கும் விமானங்களுக்கு வேண்டிய யந்திர கவனிப்பு, பழுது பார்த்தல், சீர்திருத்தல் முதலிய வேலைகளைச் செய்தல்.

கரு:—எவ்வளவோ தூரத்திலிருக்கிற சீமைக்குப் போய், இவ்வளவு நல்லபேர் எடுத்தாங்களே, அவங்க நம்ப நாட்டுக்கு நல்ல பேர் கொண்டுவந்தாங்கள். இது ஒரு நல்ல சமாச்சாரந்தானுங்க.

கி.மு:—நல்லபேர் கொண்டுவந்த சிலரைப்பற்றி உனக்குச் சொல்லட்டுமா?

கரு:—சொல்லுங்களேன், கேக்கிறேன். இன்னம் மழை 'பிசு, பிசு' இண்ணு பேயுதே. மழை நிக்கிற வரைக்கும் சொல்ற கதை யெல்லாம் கேக்கிறேனுங்க.

கி.மு:—சரி, சொல்லுகிறேன், கேள். ஒரு இந்திய மாணவன் விமான ஓட்டிப் பரீட்சையில் தேறவில்லை. ஆனால் அவனுக்குப் பரீட்சையில் 'பாஸ்' செய்ய வேண்டும் என்று ரொம்பவும் இஷ்டம். அதிகாரிகளிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். ஓழிந்த நேரங்களில் விமானத்தில் பறந்து பயிற்சி பெறுவதற்கு அனுமதி கேட்டான். அனுமதி கொடுக்கப்பட்டது. கூடிய சீக்கிரத்தில் அவன் தேர்ச்சி பெற்று, விமான ஓட்டிகளுக்கு ஒரு 'சார் ஜண்ட்'டாக இருக்கிறான். ஒரு 'ஸ்பிட்பைர்' விமானத்தை ஓட்டுகிறான்.

கரு:—அதென்னாங்க, 'பிட்பைர்' இண்ணு சொன்னீங்களே, அது விமானத்து பேருங்களா?

கி. மு.:—அது ஒருவகையான சண்டை விமானம். இப்படிப்பட்ட விமானங்கள் ஏராளமாக பிரிட்டனில் இருக்கின்றன. 'பாம்பர்' அல்லது வெடிகுண்டு விமானம் என்பது மற்றொரு விதமான விமானம். வேறொரு இந்திய மாணவன் இந்த வெடிகுண்டு விமானப்படையில் ஒரு 'சார்ஜண்ட்'டாக இருக்கிறான். இரண்டு இந்திய மாணவர்கள் ஒரே சமயத்தில் பிரிட்டிஷ் விமானப்படையில் சேர்ந்தார்கள்; ஒரேயிடத்தில் பயிற்சி பெற்றுவருகிறார்கள்; ஒரே இடத்தில் வசிக்கிறார்கள். இரண்டுபேரும் ரொம்ப கெட்டிக்காரர்கள், இதுவரைக்கும் மூன்றுமாதமாயிற்று. ஒவ்வொரு பரீட்சையிலும் திறமையாக இருவரும் தேரிவருகிறார்கள், 'இந்த மாதத்தில் யார் முதலாகத் தேருவார்கள்?' என்பது அவர்களுடைய பிரிட்டிஷ் சகாக்கள் அடிக்கடி கேட்கும் கேள்வி.

கரு:—சரிதாங்க. இன்னம் வேறே தேசத்துப் பசங்கள் இந்த விமானப்படையிலே சேந்திருக்காங்களா?

இந்தியர்களின் சிறப்பு.

கி. மு.:—பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து அநேகர் சேர்ந்திருக்கிறார்கள். ஒப்பிட்டுப் பார்த்தால், நம்மவர்கள் சிறப்பாகத்தான் இருக்கிறார்கள். இந்தியர்களுடைய உடல் வல்லமை, நடந்துகொள்ளும் மாதிரி, அவர்களுடைய நீல உடை, வலது தோளின் மேல் 'இந்தியா' என்ற பெயர் சித்திரிக்கப்பட்டிருப்பது, இவையெல்லாம் சிறந்து விளங்குகின்றன. இந்தியர்கள் நல்ல பேரெடுத்திருக்கிறார்கள். விருந்துகளுக்கெல்லாம் அவர்களைக் கூப்பிடுகிறார்கள். 'லீவு நாட்களில் சீமையிலுள்ள பல 'கிளப்பு'களிலும், கலாசாலை உணவுச்சாலைகளிலும் அவர்கள் தங்குவதற்கு இடங்கொடுக்கிறார்கள். பொதுவாக, பிரிட்டிஷ் விமானப்படையில் சேர்ந்த இந்தியர்களெல்லாம் நம் நாட்டுக்கு நல்ல பேரைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கரு:—இது ஒரு நல்ல சேதிதாங்க. போன இடத்தில் நல்ல பேரெடுத்தது ஒரு பெரியகாரியந்தானுங்க. ஆனால், இவ்வளவு சமாச்சாரம் நீங்க எப்படி தெரிஞ்சுவச்சிருக்கிங்க?

கி. மு.:—என்ன கருப்பா இப்படிக்கேட்கிறாய்? நான் தான் தினந்தோறும் சமாச்சாரப் பத்திரிகைகளையும், வாரந்தோறும் தமிழ் யுத்த சஞ்சிகையும் படிக்கிறேனே! நீ கூட எத்தனையோ தடவை நான் திண்ணையில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கும்போது பார்த்திருக்கிறாயே. எவ்வளவோ விஷயங்கள் அவைகளில் வெளியாகின்றன. நீ வாசக சங்கக் கூட்டத்துக்கு அடிக்கடி வாப்பா!

கரு:—நான் வரேனுங்க. ஊட்டு சண்டையை ஒரு வழியா முடிச்சுப்புட்டு நான் கட்டாயம் வரனுங்க. கிணத்துத்தவளைக்கி நாட்டு வளப்பம் என்னாத்துக்கு இண்ணு எங்க தாத்தா, முத்தாத்தா அல்லாம் சொல்லுவாங்க. அந்தக்காலம் போச்சிங்க. இப்போ அல்லாந்தெரியணுங்க. அஞ்சும் மூணும் தெரிஞ்சாதானுங்க மனுஷாளுக்கு ஒரு மதிப்பு. எனக்கு சண்டை சமாசாரம் தெரிஞ்சிகணும் இண்ணுரொம்ப ஆசை தானுங்க.

கி. மு.:—சரி, அந்த ஆசையை அனுபவத்தில் காட்டினால் நல்லது. அடுத்த வாசக சங்கக் கூட்டத்துக்குக் கட்டாயம் நீ வரவேண்டும்.

கரு:—அப்படியே நான் வரேனுங்க. நீங்க எம் பேர்லே சந்தேகப்படவாண்டாம். வரேன் இண்ணு சொன்னாக்கா தவறமாட்டேனுங்க.

கி. மு.:—ரொம்ப சரி, சந்தோஷம். இப்போது மழையும் நின்றுவிட்டது. நான்போய் வருகிறேன்.

கரு:—போய்ட்டு வாங்க. இண்ணிக்கி ரொம்ப சங்கதி தெரிஞ்சுகிட்டேனுங்க. உங்களுக்கு ரொம்ப கும்பிடுங்க."

மழையும் நின்றது. கருப்பனும், கிராம முனிசீப்பும் தங்களுடைய வீடுகளுக்குச் சென்றார்கள்.

இந்திய சிப்பாய்களின் வீரம்

வைஸ்ராய் பிரபுவின் புகழ்ச்சி

வடக்கு ஆப்ரிக்க வெற்றியின் முக்கியம்

[சென்ற திங்கட்கிழமை, கல்கத்தாவில் ஐக்கிய வர்த்தக சங்கங்களின் வருஷாந்தரக் கூட்டம் கூடிற்று. அதில் இந்திய வைஸ்ராய், மேன்மைதங்கிய லின்லித்கோ பிரபு, ஒரு நீண்ட பிரசங்கம் செய்திருக்கிறார். அவர் கூறியதன் சாரம் கீழே தரப்படுகிறது.]

தரைச்சண்டையில், ஆப்பிரிக்காவில் உள்ள இந்தாலிய ஏகாதிபத்தியத்தை நமது துருப்புகள் அழித்துவிட்டன. இப்போது இந்தியாவின் பிரதம தளகர்த்தராக இருக்கும் ஜெனரல் சர் ஆர்ச்சிபால்டு வேவல் அவர்களின் தலைமையின்கீழ் இந்த மகத்தான வெற்றி பெறப்பட்டது. அவருடைய புகழ் என்றும் அழியாது. இந்த வெற்றி சரித்திரத்திலேயே முக்கியமான வெற்றிகளுள் ஒன்று. இதில் இந்தியாவும் இந்தியத்துருப்புகளும் சிறந்த பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றன. இந்தியயுத்த முயற்சியின் சிறப்பையும், இந்தியச் சிப்பாய்களின் வீரத்தையும் தானே நேரில்கண்டு அதைப்பற்றி என்னிடம் மிகவும் புகழ்ச்சியாக ஜெனரல் வேவல் கூறியிருக்கிறார்.

இந்தியத்துருப்புகள் சில நாள்களுக்கு முன் கொண்டார் என்ற இடத்தில் சண்டையிட்டன. இப்போது வடக்கு ஆப்பிரிக்காவில் போர்செய்துகொண்டிருக்கின்றன. இந்தியப் பட்டாளத்தின் பழைய பெருமையையும், இந்த யுத்தத்தில் இந்திய சிப்பாய்கள் முந்திய சண்டைகளில் அடைந்த புகழையும், இந்தியத்துருப்புகள் இப்போது அழிக்கவிடாமல் காப்பாற்றிக்கொண்டு வருகின்றன.

இராக்கிலும், பாரசீகத்திலும் (இரானிலும்), நமது எதிரிகள் செய்த வேவுகார சூழ்ச்சிகளும் தந்திர முயற்சிகளும் அழிக்கப்பட்டன. இந்த வேலையில், இந்தியத் துருப்புகள் மிகவும் உதவி புரிந்தன.

சமத்துவத்தில் வெற்றி

இப்போது ஜப்பானுடைய ஆக்கிரமிப்பினால், எல்லோருடைய கவனமும் தூரக் கிழக்குப் பிரதேசத்தில் இருக்கிறது. இதனால் வடக்கு ஆப்பிரிக்காவில் ஜெனரல் ஆக்கின் லேக்கின் தலைமையின்கீழ் நமது துருப்புகள், பிரிட்டிஷ் விமானப்படையின் உதவியைக்கொண்டும், பிரிட்டிஷ் கடற்படையின் உதவியைக்கொண்டும் அடைந்திருக்கும் பெரும் வெற்றியை மறந்துவிடக்கூடாது. ஏறக்குறைய இரு தரப்பினரும் சமபலம் உடையவர்களாயிருக்கின்றார்கள். முதல் முதலாக ஜெர்மானியர்களோடு எண்ணிக்கையில் சமபலம் உடைய நமது துருப்புகள், ஜெர்மானியர்களை நன்றாகத் தோற்கடித்திருக்கின்றன. இதனால் நமது துருப்புகளின் மேன்மை விளக்கமாகப் புலப்படுகின்றது.

முக்கியமான ஒரு பெரிய யுத்தம் வடக்கு ஆப்பிரிக்காவில் நடந்து வருகிறது. அது எவ்வளவு முக்கியமானது என்பது பின்னால் தெரியவரும். இந்த யுத்தத்தில் இந்தியத்துருப்புகள் சிறப்பான முறையில் போர்புரிந்து வருவது எல்லோராலும் பாராட்டத்தக்கது.

அடுத்த யுத்த சஞ்சிகை 1942-ம் ஹு ஜனவரி மீ 9உ யன்றைக்கு வெளியிடப்படும்.

குறிப்பு:—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.

[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

4504)

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.